தொழில்சார் கல்வி

# விசேட கல்வியின் அவசியம்



120121

ஆசிரியர் கல்விப் பாடநெறி

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | பி. எல். ராஜபக்ஸ |
| பாடப்பதிப்பாசிரியர்கள் | : | பி. எம். எல். ஆர். பண்டார |
| | | பீ. டப். மனதுங்க |
| | | எஸ். எம். ஆர். பி. சமரகோன் |
| | | எஸ். ஏ. சீ. எம். கராமத் |
| தளக்கோலம் | : | அ. சிவராஜா |
| மேற்பார்வை | : | ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| | | கே. ஏ. பியதிஸ்ஸ |
| பணிப்பு | : | கலாநிதி எஸ். டீ. எல். அமரகுணசேகர |

R. Regina
92-12-29

# விசேட கல்வியின் அவசியம்

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

2 - PP 1873 - 10,000 (92/03)

பொருளடக்கம் பக்கம்


0.0 அறிமுகம் .............................. 3

1.1 குறிக்கோள்கள் .............................. 3

2.0 முற்சோதனை .............................. 4

பகுதி I

3.0 விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர் என்பவர் யார் ? ........ 5

பகுதி II

4.0 இலங்கையில் விசேட கல்வி வேலைத் திட்டம் பரவியமை .............. 15

பகுதி III

5.0 விசேட கல்விச் சேவை முறை ...... 23

6.0 பொழிப்பு .............................. 27

7.0 பிற்சோதனை .............................. 28

8.0 ஒப்படை .............................. 30

9.0 விடை .............................. 31

10.0 அநுபந்தம் .............................. 30



© தேசிய கல்வி நிறுவகம்



பதிப்பு 1 : 1

## 0.0 அறிமுகம்

விசேட கல்வித்தேவைகள் தொடர்பாக உமது கைகளில் கிடைக்கப்பெற்ற முதல் மொடியூல் இதுவாகும். இதன் முன்னர் நீர் கற்ற பிள்ளையின் வளர்ச்சிப் பருவங்கள் தொடர்பான மொடியூலில் இதனுடன் சம்பந்தமான விவரங்கள் தரப்பட்டிருந்தன. அவ்விவரங்களும் இங்கு பயனுள்ளதாகும்.

ஒவ்வொரு மாணவனுக்கும், பிறப்புரிமையான தனித்தன்மை உண்டு. ஆகவே ஒவ்வொருவரும் தனித்துவமான ஒரு நபராவர். ஒரே சூலில் இருந்து உண்டாகும் இரட்டையர்களிடமும், தனித்துவமான குணவியல்புகள் உண்டு. சூழலின் பாதிப்புக்கள் காரணமாகவும் நபரிடம் தனித்துவமான இயல்புகள் ஏற்படக்கூடும். அவர்கள் ஒவ்வொருவரினதும் அனுபவங்கள் வேறுபட்டவையே. மாணவர்கள் காட்டும் இவ்வாறான தனித்துவமான இயல்புகளை ஆசிரியர்களாகிய நாங்கள் மிக உன்னிப்பாக நோக்கல் அவசியமாகும். ஆகவே ஒரே சட்டகமொன்றினுள் ஒரேவிதமாக வளர்ச்சியுறும் மாணவர்களிடையே அடைவு வித்தியாசமாக அமைவதையிட்டு நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வகுப்பறையினுள் பொதுவாக கைக்கொள்ளப்படும், கற்பித்தல் முறைகள் சில மாணவருக்கு சிரமங்களை தோற்றுவிப்பதற்கு ஏதுவாக அமைகின்றது. இவ்வாறான சிரமங்கள் ஏற்படுவது அவர்களது குறைபாடுகளாலல்ல எனவும் அவர்களின் தனித்துவம் காரணமாக ஏற்படும் நிலைகளினால் எனவும் நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும். இவர்களின் தனித்துவமான வேறுபாடுகளை விளங்கி அதற்கேற்றவாறு கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை வடிவமைப்பதன் மூலம் முன்னிலும் கூடிய பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும் என நாம் விளங்கிக்கொள்ளல் மிக அவசியமாகும்.

## 1.0 குறிக்கோள்கள்

இம் மொடியூலைக் கற்பதன் மூலம் கீழ்க் காணும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

* விசேட கல்வித் தேவைகள் என்னும் எண்ணக்கருவினை கிரகித்துக் கொள்வர்.
* விசேட கல்வித் தேவைகளை உடைய மாணவர் சார்பான ஏற்புடைத்தான நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்வர்.

* விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்களின் கல்வி தொடர்பான சட்டரீதியான முறைமைகளை அறிவர்.

* இம்மாணவர்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய கல்வித் தேவைகளைப் பற்றிய விளக்கத்தினை ஏற்படுத்திக் கொள்வர்.

* கூடிய பயனுறுதியுள்ள கல்வி வேலைத் திட்டங்களை வடிவமைக்கும் திறனை வளர்த்துக் கொள்வர்.

இம் மொடியூலினை கற்பதற்காக தயாராகும் வகையில், கீழ்வரும் முன் மதிப்பீட்டில் ஈடுபடுக.

## 2.0 முற்சோதனை

(1) சகல மாணவரும் தனித்துவமான மாணவரே. இக் கூற்றினால் கருதுவது ,

(அ) சகல மாணவருக்கும் தனித்துவமான திறன்கள் உள.

(ஆ) சகல மாணவருக்கும் உரிமையான தனித்துவம் உண்டு.

(இ) சகல மாணவருக்கும் சமமான தேவைகள் உள.

(ஈ) சகல மாணவருக்கும் தனித்துவமான அறிவு உண்டு என்பதாகும்.

(2) ஆசிரியர், மாணவர் சார்பாக கற்றல் அனுபவங்களை திட்டமிடுவது,

(அ) மாணவரின் வயதின் அடிப்படையில்.

(ஆ) மாணவர் வாழும் சூழலின் அடிப்படையில்.

(இ) எதிர்கால தொழில் நோக்கங்களை முன்வைத்து.

(ஈ) மாணவரின் வகுப்பு, திறன், தேவை ஆகியவற்றின் அடிப்படையில்.

(3) ஆசிரியர் பொதுவாகக் கைக்கொள்ளும் கற்பித்தல் முறைகளின் பயனாக,

(அ) சகல மாணவரும் சமமான அடைவினைப் பெறுவர்.

(ஆ) சிறந்த ஒழுக்கம் ஏற்படும்.

(இ) சகல மாணவரும் சம கல்விச் சந்தர்ப்பத்தினைப் பெறுவர்.

(ஈ) சில மாணவருக்கு கல்வி தொடர்பான பிரசினைங்கள் ஏற்படும்.

> உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

வெற்றிகரமாக முற்சோதனையை முடித்த உமக்கு, விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர் யார் என இனங் காண பகுதி I உதவி அளிக்கும்.

## பகுதி I

### விசேட கல்வி தேவைகளையுடைய மாணவர் யார்?

எல்லா மாணவருக்கும் உரிமையான தனித்துவங்கள் உண்டு. அது போன்றே எல்லா மாணவருக்கும் தனது எதிர்கால வாழ்க்கைக்கு இயைபாகுவதற்கும், வளர்ச்சியுறுவதற்கும் உதவி தேவைப்படும். சில மாணவர் கோரும் உதவியினளவு குறைவானதாகும். மற்றும் சிலர் கோரும் உதவியினளவு கூடியதாகும். ஆகவே மாணவர்களின் தேவைக்கேற்ப பாடசாலை காலத்தினுள், நீண்டகால கட்டத்திற்கு அல்லது குறுகிய கால கட்டத்திற்கு மேலதிக உதவிகளை அளிக்க வேண்டி நேரிடும். அதிக அளவில் உதவிகளை அளிக்க வேண்டிய மாணவரை சம்பிரதாய பூர்வமாக "ஊனமுள்ள", "பலவீனமுள்ள", "குறைபாடுடைய" அல்லது "அங்கவீனமுற்ற" மாணவர் என இனங் காணப்படுவர். இவ்வாறு இனங் காணப்பட்ட அவர்களுக்கு விசேட தீர்வாக அமையும் கல்வியினை பெற்றுக் கொடுத்தல் அவசியமென நம்பப்பட்டது. மேற்படி சம்பிரதாயபூர்வமான கொள்கை கல்வி நடவடிக்கைகளின் போது பயனுள்ளதென இன்று கருதப்படுவதில்லை. இவ்வகைக் குறைபாடுகளை உடைய அல்லது சிக்கல்களை உடைய மாணவர் இன்று விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர் என அழைக்கப்படுகின்றனர். இவர்களும் மற்றைய மாணவர்களைப் போன்றே பொதுவான தேவைகள் உடையவர்கள் எனவும், மேலதிகமாக விசேட தேவைகளை உடையவர்கள் எனவும் இங்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலும் மாணவர் மையமானதும் தனி நபரை நோக்கியதுமான கல்வியை திட்டமிட வேண்டுமென இங்கு ஏற்றுக்

கொள்ளப்படும். மாணவரின் பல்வேறு தேவைகளுக்கு தக்கவாறான அல்லது தனி நபருக்கு இயைபான கல்வித்திட்டங்களை ஏற்படுத்துவதன் மூலம் சகலருக்கும் கல்வியை பெற்றுக் கொடுக்கும் குறிக்கோளை அடையலாம். இப்போது விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர் பற்றிய விபரங்களை பற்றி ஆராய்வோம்.

## விசேட கல்வி தேவைகளையுடைய மாணவர் தொடர்பான தரவுகள்

இலங்கையிலுள்ள விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர் பற்றிய சரியான எண்ணிக்கை விவரங்கள் (புள்ளி விவரங்கள்) சேகரிக்கப்படவில்லை. சர்வதேசிய அளவில், ஏற்றுக் கொள்ளத்தக்க விகிதங்களையும், எழுந்தவாறான பரிசோதனைகளின் தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு அனுமானிக்கப்பட்ட புள்ளிவிவரங்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. ஐக்கிய நாடுகளின் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் நோக்கும்போது குறைந்த பட்சம் பிறக்கும் பிள்ளைகளின் (10 %) பத்து வீதமானோர், விசேட உதவிகளை பெற வேண்டிய நிலையில் உள்ளனர். இவர்கள் உடல், உள ரீதியான குறைபாடுகளினால் கஸ்டமுறுகின்றனர். 1987 இல் யுனிசெப் நிலையத்தினால் வெளியிடப்பட்ட "இலங்கையில் குழந்தைகளினதும் பெண்களினதும் நிலைமையினை விவரிக்கும்" அறிக்கையில் வெளிக்கொணரப்பட்டிருப்பது போன்று, ஆரம்ப பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவரில் 12 % பல்வேறு கற்றல் குறைபாடுகளினால் அல்லலுறுகின்றனர்.

பார்வை, பேச்சு, கேட்டல் மற்றும் இயக்க சிரமங்களையுடைய மாணவர்களும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். 1981 ஆம் ஆண்டின் பாடசாலை மதிப்பீட்டு அறிக்கைகளின்படி ஆரம்ப பாடசாலை மாணவ மாணவியரில் 15 % பிற்பட்ட வகையைச் சேர்ந்தவர்களாவர்.

இலங்கையில் முதலாம் ஆண்டில் உட்புகும் மாணவருள், 5 ம் ஆண்டு வரை கல்வியைத் தொடர்வது 71 வீதமானோர் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு 8 ம் ஆண்டைத் தொடர்வோர் முழு மாணவர் தொகையினரில் 50 % மாத்திரமே. பல்வேறு காரணங்களினால் 50 % மாணவர்களுக்கு நடைமுறையிலுள்ள பாடசாலை அமைப்பினுள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இல்லை எனக் கூறலாம். இவற்றில் குறிப்பிடத்தக்க தொகையினர் குறைபாடுகள் காரணமாய் பாடசாலையை விட்டுச் செல்வோர் ஆவர்.

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வு அறிக்கையின் "இலங்கை மாணவரின் சேர்வுத்திறன்" என்னும் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிவர விளக்கத்தினை நாம் அவதானிப்போம். இவ்விளக்கத்தின்படி 1ம் ஆண்டில் பாடசாலையில் சேரும் மாணவரில் 8 வீதமானோருக்கு உட்புகும் திறன் இல்லை.

22% விஷேட உதவிகளை பெற்றுக் கொடுத்ததன் பின்னரே திறனைப் பெறுகின்றனர்.

மாணவரில் 62% உட்புகும் திறனைப் பெற்றுள்ளனர்.

ஆயினும், மாணவரில் 8%, 2 ம் ஆண்டிற்கு தகுதி யுடையோராவர்.


மேற்படி புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பாடசாலை முறைமையில் தக்கவாறான மாற்றங்களை ஏற்படுத்துதல் அவசியமாகும் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. வயது மட்டங்களிற்கேற்ப அல்லாமல் தேவை, திறன் என்பதன் அடிப்படையில் மாணவரை குழுக்களாக்குதல் அவசியம் என தர்க்கிக்கப்பட்டுள்ளது. கற்றல், கற்பித்தல் செயற்பாடு களினுள், எந்தவொரு மாணவரும் தம்மைபற்றி கூடுதலாக அல்லது குறைவாக மதிப்பிடுதலை தவிர்க்கும் வகுப்பறையினை உண்டாக்குதல் வேண்டும்.

மேலும் இவ்வறிக்கையில், வளர்ச்சியுறும் நாடுகளில், பூரண பாடசாலைச் சேர்வினை நிறைவேற்றும்போது, புதிய சவால்களுக்கு ஈடுகொடுக்க வேண்டியுள்ளது என்றும், இச்சவால்களுக்கிடையில், பௌதிக வளங்களை அளித்தல், போதியளவிலான ஆசிரிய பயிற்சி நெறிகளை ஏற்படுத்துதல், பாடத்திட்ட திருத்தங்கள் ஆகியனவும் அடங்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் முதலாம் ஆண்டு மாணவரில் 50% இப்போது நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்தினால் நற்பலனை பெறுவதில்லை என அறியலாம். அண்ணளவாக நோக்கும்போது, பல்வேறு பரிசோதனை மற்றும் ஆய்வுப் பெறுபேறுகளின்படி, மாணவரில் 10% விசேட தேவைகளையுடைய மாணவர் எனக் குறிப்பிடல், குறை மதிப்பீடேயன்றி கூடிய மதிப்பீடு அல்லவென ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

மேற்படி விவரங்களின்படி ஒரே வகுப்பறையினுள் பல்வேறு மட்ட திறமைகளையுடைய மாணவர்கள் உளர் என விளங்குகின்றது.இம் மாணவரின் அடைவு வேறுபடுவது

பல்வேறு காரணங்களினாலென நாம் விளங்கிக் கொள்ள முடியும். சிலர் பல்வேறு வகையில் ஊனமுற்றுள்ளனர். மற்றும் சிலர் விசேட திறனை உடையோராவர். சகல மாணவரும் தத்தம் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுத்தல் ஆசிரியராகிய எமது கடமையாகும். அம்மாணவரின் கற்றல் திறன்பற்றிய சர்வதேச சமூகத்தின் கொள்கையின்பால் உமது கவனத்தை ஈர்க்க முனைகின்றேன். இங்கு நாம் சமர்ப்பிப்பது, ஐக்கிய நாடுகள் சபையினரால், ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பல்வேறு மனித உரிமைச் சாசனங்களில் காணப்படும் விவரங்களாகும். இவ்விவரங்களை வாசிப்பதன் மூலம், விசேட கல்வித் தேவைகள் பற்றி உமக்குவிரிவான விளக்கம் கிடைக்குமென நம்பலாம். கீழ்வரும் வரைபு இதனை மேலும் விளக்கும்.





உரு 1

90% பொதுவான கல்வித் தேவைகளுடைய மாணவர்.

10 % மேலதிக கல்வித் தேவைகளையுடைய மாணவர்.

10 % பரவியுள்ள முறைமை கீழ்வரும் வரைபில் விரிவாக காட்டப்பட்டுள்ளது.




விசேட கல்விச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன் அவசியம் பற்றி நாம் இப்போது ஆராய்வோம்.

**கல்விச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவது தொடர்பாக சர்வதேச அறிக்கைகளில் அடங்கியுள்ளவை**

1948 ஆம் ஆண்டின் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச வெளியீடு, 26 ம் சரத்து.

"சகலரும் கல்வியைப் பெறும் உரிமை உள்ளவர்களே. ஆகவே குறைந்த பட்சம் ஆரம்ப அல்லது முதல் நிலைகளிலாவது கல்வி இலவசமாக அளிக்கப்படல் வேண்டும்."

**1971 இன் மந்த புத்தியுள்ள நபர்களின் உரிமை தொடர்பான சர்வதேச வெளியீடு - பந்தி II**

மந்த புத்தியுள்ள நபர், தமது திறனையும், அபிலாசைகளையும் அபிவிருத்தி செய்வதற்கும், தேவையான மருத்துவ சேவைகளை பெற்றுக் கொள்வதற்கும், கல்வி, பயிற்சி, புனர்வாழ்வு மற்றும் போதனைகள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உடையோராவர்.

**1975 ம் ஆண்டின் வலுவிழந்தோர் தொடர்பான விசேட உரிமைகள்பற்றிய வெளியீடு 6 ம் சரத்து**

"வலுவிழந்த நிலைகளினால் அல்லலுறும் நபர்கள் தமது நிலை தொடர்பான மருத்துவ அல்லது உளவியல் அறிவுறுத்தல்களை பெறுவதற்கும், தமது குறைபாடுகள் தொடர்பான வைத்திய சேவைகளை பெறுவதற்கும் உரித்துடையோராவர். மேலும் சமூக ஒன்றிணைப்பினையும், மக்கள் ஒன்றிணைப்பினையும், உயர்மட்டத்தில் அபிவிருத்தி அடையச் செய்வதற்கும், அபிவிருத்தியினை வேகமடையச் செய்வதற்காக, தேவையான திறன்களையும், தகைமைகளையும் பெற்றுக் கொள்வதற்கும் குறைபாடுகளை மட்டுப்படுத்தும் உதவிகள், மருத்துவ வசதிகள், சமூக புனர்வாழ்வு, கல்வி தொழிற்பயிற்சி போதனைகள், மற்றும் நிலைய சேவைகள் இவற்றில் அடங்கும்.

**1981 ஆம் ஆண்டின் சர்வதேச அங்கவீனர் ஆண்டினைப் பிரகடனப்படுத்தும்போது வெளியிடப்பட்ட வெளியீடு .**

**I ஆம் சரத்து**

அங்கவீனமுற்ற சகல நபர்களுக்கும், கல்வி, பயிற்சி, கலாசார மற்றும் பொதுசன தொடர்பு ஊடகங்களுடன் தொடர்புறுவதற்கும் தேவையான அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தல் வேண்டும்.



3 PP 1873

**6 வது சரத்து**

குறைப்பாடுகளையுடையோர், பொது வாழ்க்கைக்கும், தொழில் நிலையங்களுக்கும் ஒன்றிணைவதை இலக்காகக் கொண்டு சகல கல்வி, பயிற்சி மற்றும் கலாசார வேலைத் திட்டங்களை ஒழுங்கமைத்தல் வேண்டும். அவ்வாறு ஒன்றிணைத்தல் மிகவும் ஆரம்ப நிலையிலேயே நடைபெறல் வேண்டும். ஒவ்வோர் நபரினதும் தனிப்பட்ட சந்தர்ப்பங்களுக்குத்தக்கவாறு கல்வி மற்றும் தொழில் பயிற்சி வேலைத் திட்டங்கள் அமைதல் வேண்டும்.

**II ஆம் சரத்து.**

கல்வி மற்றும் தொழிற்பயிற்சி தொடர்பான வசதிகளையும், உபகரணங்களையும் அங்கவீனர்களுக்கு பெற்றுத் தரல் வேண்டும்.

***1989 ம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனம்***

மேற்படி உரிமை சாசன வெளியீடுகளின் உள்ளடக்கம் வழிகாட்டுதலும், ஆலோசனை கூறுதலும், முன் மொழிவுகளும் ஆகும். ஆகவே இதன்படி அவற்றை சட்டரீதியாக நடைமுறைப்படுத்தும் ஏற்புடைமை கிடையாது. ஆயினும் 1989 ம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இச் சாசனம், உலக நாடுகள் பலவற்றில் சட்டரீதியாக்கப் பட்டுள்ளது போன்ற சந்தர்ப்பத்தை பெறுகின்றது.

**அதன் 23 ஆம் சரத்து வருமாறு**

(1) உடல் அல்லது உள குறைபாடுடைய மாணவனுக்கும் பூரணமாக பொது வாழ்க்கையினை அனுபவிக்கும் உரிமை உண்டு. இதில் பொது மக்களின் உற்சாகமான பங்களிப்பை ஏற்படுத்தும் வகையில், செயற்படுதற்கும், தக்க வாறான நிலைமைகளை பாதுகாப்பதற்கும் அரசு கடப்பாடுடையது.

(2) மாணவனின் நிலைமைக்கும் பெற்றோரின் விருப்பத்திற்கும் தக்கவாறு அமையும், சேவைகளை பெற்றுக்கொள்ள குறைபாடு உள்ள பிள்ளைகளுக்கு உரிமை உண்டென்பதை அரச பகுதியினர் ஏற்றுக் கொள்வர்.

விசேட கல்வித் தேவைகளை உடைய மாணவரும் பொதுப் பாடசாலைத் தொகுதியுள் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமை உடையோரே என்பதனை விளங்கிக் கொள்வதற்காக இலங்கையின் விசேட கல்வி தொடர்பான சட்ட ரீதியான விடயங்களையிட்டு எம் அவதானத்தைச் செலுத்துவோம்.

**விசேட கல்வித் தேவைகள் உடைய மாணவர் தொடர்பான சட்ட ரீதியான வழி முறைகள்**

காலத்திற்கேற்றவாறான ஏற்றுக் கொள்ளப்பட்ட கல்விக் கொள்கைகளின் அடிப்படையில், சட்ட ரீதியான வழி முறைகள் செயற்படுத்தப்படுமென நாம் அறிவோம்.

இவ்வாறான மாணவருக்கு தனியொரு பாடசாலைத் தொகுதியினை ஏற்படுத்தத் தக்கதென்ற சிந்தனையின் அடிப்படையில் ஆரம்ப காலத்தில் சட்ட ரீதியான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. பின்னர் பொதுப் பாடசாலை முறைமையினுள் இவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்த வழி கோலியபடி இவ்வழிமுறைகள் பரிணாமமடைந்தன.

அவற்றின் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

***1939 ஆம் ஆண்டின் கல்விச் சட்டவாக்கம்***

*பந்தி 185,* *உப பந்தி 11.*

பார்வை குறைவற்றோருக்கும், புலனற்றோர்க்கும், வலு விழந்தோர்க்கும், காக்கை வலி போன்ற நோயினால் அல்லலுறுவோருக்கும் தமது கல்வியினைப் பெற்றுக் கொள்வதற்கான பாடசாலைகளை அமைத்தலும், இப்பாடசாலைகளை அரசுடமையாக்குவதும், ஆசிரியர்களை நியமித்தலும், இடமாற்றம் செய்தலும், சேவையில் இருந்து நீக்குதலும், பதவி நிலைப்படுத்துதலும், உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தலும் தொடர்பான பிரமாணங்களை ஏற்படுத்துதற்கு கல்வி அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் சட்டவாக்கம் 1944 ஆம் ஆண்டின் 11 ஆம் பந்தி 44 அ உப பந்தி**

கண் பார்வையற்ற, செவிப்புலனற்ற, வலுவிழந்த மற்றும் காக்கைவலி போன்ற நோயினால் பாதிப்புற்ற மாணவர்கள்

தொடர்பான பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு முழுச் சம்பளத்தையும் வழங்க முடியும்.

சம்பளம் அளிப்பதற்காக ஆசிரியர் தொகையினரை கணிப்பிடுதல், பத்து மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையிலாகும்.

**1969 ஆம் ஆண்டின் அமைச்சரவை அறிக்கை**

(1) குறைபாடுகளினால் அல்லலுறும் மாணவரைப் பொதுப் பாடசாலைகளில் ஒன்றிணைக்கும் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

(2) மேலும் குறைபாடுகளினால் அல்லலுறும் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக அவர்கள் சம்பளத்தில் 10% தொகையை அளிப்பதற்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**1986 ஆம் ஆண்டின் மந்திரி சபை அறிக்கை**

மாவட்ட ஆசிரிய சேவை திட்ட அடிப்படையில் பதவியிலமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் விசேட கல்வி தொடர்பான பயிற்சியினைப் பெற்றதன் பின்னர் சேவை முக்கியத்துவ அடிப்படையில் மாவட்ட ஆசிரிய சேவைத் திட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட இடமளிக்கப்பட்டுள்ளது.

**1987 ஆம் ஆண்டின் மந்திரி சபை அறிக்கை**

உளக் குறைபாடு உடைய மாணவர் தொடர்பாக விசேட பாடசாலைகளில் சம்பளம் அளிப்பதற்காக ஆசிரிய தொகை மதிப்பீடு, மாணவர் அலகு 5 க்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலாகும்.

**(1) இலங்கையின் கல்வி முறையினைப்பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஆய்வுச் சபையின் அறிக்கை - 1929 — 66 பந்தி**

கண் பார்வையற்ற, காது கேளாத மாணவருக்கான பாடசாலை : இங்கு 1925 ஆம் ஆண்டில் கண்பார்வையற்ற 66 மாணவரும் காது கேளாத 92 மாணவரும் கற்று வந்தனர். அவர்களுள் 32 காது கேளாத மாணவரும் 14 கண் பார்வையற்ற மாணவரும், முழு நேர தொழிற் கல்வியில் ஈடுபட்டனர். ஆகவே எழுதுல் ,வாசித்தல் போன்றவற்றிற்கும் மேலதிகமாக, நெசவு செய்தல், மரவேலை, பிரம்பு வேலை, கூடை பின்னுதல், கயிறு திரித்தல், உடை தயாரித்தல், தோட்ட வேலை போன்ற துறைகளையும் கற்பதற்கு மாணவருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

**(2) இலங்கையின் கல்வி பற்றிய விசேட குழு அறிக்கை — 1943 — 331 ம் பந்தி**

"தரவாரியாக (வகுப்பு வாரியாக) பிரிக்கும் முறையினால் மாணவருக்கு பலனுள்ள கல்வியை பெற்றுத்தரல் முடியாதுள்ளது. தரவாரியாகப் பிரிப்பதைப் போன்றே பாடத்திட்டத்திலும் வேறுபாடுகளை ஏற்படுத்தல் அவசியமாகும்."

**(3) தேசிய கல்வி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை — 1961 — 84 ஆம் பந்தி**

"மாணவரின் குறைபாடுகளின் அளவு குறைவாயுள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும், கல்வியைப் பெற்றுக் கொடுத்தல், பொதுப் பாடசாலையிலேயே நடைபெறல் வேண்டும். குறைபாடுகள் கூடிய அளவில் காணப்படும்போது ஆரம்பக் கல்வியை விசேட பாடசாலைகளின் மூலம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், குறிப்பிட்ட அளவு திறன்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர்களையும் பொதுப் பாடசாலைகளில் கற்க வழிகோலல் அவசியமாகும்."

**(4) கண் பார்வையற்ற மாணவரின் கல்விபற்றிய ஆய்வறிக்கை — 1966 — ஜீன் கண்மோர்**

* முடிந்த எல்லாச் சமயங்களிலும், பார்வையற்ற மாணவர், பொதுவான இடைநிலைப் பாடசாலைகளுக்கு ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.

* சகல ஆசிரிய பயிற்சி நெறிகளின் கலைத்திட்டத்திலும் விசேட மாணவர் (உள, உடல், மன நிலை வேறுபாடுகளை உடைய) பற்றிய பாடநெறியும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

* பார்வைக் குறைபாடுடைய மாணவரை பொதுவான பாடசாலைகளில் ஒன்றிணைப்பதை பரீட்சிக்க பரீட்சார்த்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்தல் வேண்டும்.

* பார்வைக் குறைபாடுடைய மாணவருக்கு கற்பித்தல் தொடர்பான பாடத் திட்டத்தை பல்கலைக்கழகங்களிலும் ஆரம்பித்தல் வேண்டும்.

**கல்வி புனரமைப்பிற்கான குழு அறிக்கை - 1979.**

**155 ஆம் பந்தி**

* குறைபாடுகளினால் அல்லலுறும், நபர்கள்பற்றிய தேசிய ரீதியான ஆய்வினை ஏற்படுத்துதல்.

* குறைபாடுகளினால் அல்லலுறும் அனைவரையும், பதிவு செய்வதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்.

* பெற்றோர் அமைப்புக்கள் உள்ளிட்ட தனியார் தாபனங்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய பலவீனங்களினால் அல்லலுறுபவர்களுக்கான, மத்திய அதிகார சபையினை ஏற்படுத்தல்.

* விசேட கல்விக்கான பாடநெறிகளை சகல ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளிலும் ஏற்படுத்துதல்.

* ஒன்றிணைந்த பாடசாலைத் திட்டத்தை, விசேட பாடசாலைத் திட்டத்திற்கு சமாந்தரமாக, வளர்ச்சியுறச் செய்தல்.

* செவிப்புலன் குறைபாடுகளினால் பாதிப்புற்றுள்ள மாணவர்கள் சார்பாக, ஆரம்ப பாடசாலை சேவைகளை முன்னேற்றுதல்.

* ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முறைகளையும், அவர்களுக்கு பதவி உயர்வுக்கான வழி வகைகளையும் ஏற்படுத்துதல்.

* குறைபாடுடையவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும், கொள்கைகளையும், ஒன்றிணைப்பதற்காக திணைக்களங்களுக்கிடையேயான குழுவொன்றினை ஏற்படுத்துதல்.

**செயற்பாடு : 1**

விசேட கல்வி தொடர்பாக 1ம் பந்தியில் தரப்பட்ட விவரங்களை வாசித்தறிந்த நீர் அதன் அடிப்படையில் கீழ்வரும் செயற்பாட்டினில் ஈடுபடுக.

பகுதி ஒன்றில் நீர் கற்றவற்றின் அடிப்படையில் கீழ்தரப்பட்ட அட்டவணையை பூரணப்படுத்துக. இதனை அடுத்துவரும் நேர்முக உரையாடல் வகுப்பின் போது உமது ஆசிரிய ஆலோசகருக்கு சமர்ப்பிக்க.

| | பரிசோதனையின் பெயர் | சமர்ப்பித்த காரணிகள் | சந்தர்ப்பம் | சமர்ப்பித்த விவரங்கள் |
|---|---|---|---|---|
| 01. | | | | |
| 02. | | | | |
| 03. | | | | |
| 04. | | | | |
| 05. | | | | |
| 06. | | | | |
| 07. | | | | |
| 08. | | | | |
| 09. | | | | |
| 10. | | | | |

இலங்கையின் விசேட கல்வி வேலைத் திட்டங்களின் பரவல் தொடர்பாக உமது கவனத்தை செலுத்தவும்.

## பகுதி II

### 4.0 இலங்கையில் விசேட வேலைத் திட்டங்கள் பரவியுள்ளமை

கல்வி அமைச்சினால் பொதுவான பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவரின் நன்மை கருதி நியமிக்கப்பட்டுள்ள விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இன்று தீவின் அநேக மாவட்டங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மாவட்ட ரீதியில் நியமிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| மாகாணம் | பார்வைக் குறைபாடு உடைய மாணவர் சார்பாக × | கேட்டல் குறைபாடு உடைய மாண வருக்காக ×× | ஊனக் குறைபாடு உடைய மாணவர் தொடர்பாக ×× | விஷேட கல்வித் தேவைகளையுடைய மாண வருக்காக ××× |
|---|---|---|---|---|
| மேல் | 60 | 26 | 20 | — |
| தென் | 20 | 08 | 08 | 80 |
| மத்திய | 22 | 08 | 06 | — |
| வடமேல் | 21 | 10 | 14 | 80 |
| வடமத்திய | 21 | 06 | 06 | 80 |
| ஊவா | 04 | 02 | 03 | — |
| சப்பிரகமுவ | 20 | 04 | 02 | — |
| வடக்கு கிழக்கு | 06 | — | — | — |
| மொத்தம் | 174 | 74 | 61 | 240 |

× நடமாடும் ஆசிரியர் சேவை
×× விசேட அலகு
××× பகுதி நேர சேவை

## விசேட பாடசாலை

தீவின் சில பகுதிகளில், விசேட பாடசாலைத் தொகுதி யொன்று அபிவிருத்தி அடைந்துள்ளது. முக்கியமாக இவை தொண்டர் தாபனங்களின் உதவியுடனேயே நடாத்தப் படுகின்றது. இவற்றை அரச பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் அல்லது உதவி பெறும் பாடசாலைகள் எனப் பெயர் வழங்குவர். அவ்வாறான பாடசாலைகள் பற்றிய மேலதிக விவரங்கள் கீழ் தரப்பட்டுள்ளன.

## பார்வைக் குறைபாடுடைய, கேட்டல் குறைபாடுடைய மாணவருக்கான விசேட பாடசாலைகள்

| | பாடசாலையின் பெயர் | யாருக்கான பாடசாலை | உதவி நன்கொடை பெறும் | தனியார் |
|---|---|---|---|---|
| 01. | இரத்மலானை குருடர் பாடசாலை | பார்வை யற்றோர் | √ | – |
| 02. | இரத்மலானை செவிடர் பாடசாலை | செவிப் புலனற் றோர் | √ | – |
| 03. | ராகமை-புனித சேவியர் செவிடர் பாடசாலை | செவிப்புல னற்றோர் | √ | – |
| 04. | கைதடி நபீல்ட்-குருடர், செவிடர் பாடசாலை | பார்வை/ செவிப்புல னற்றோர் | √ | – |
| 05. | மொறவெவ-சிவிராஜ் குருடர், செவிடர் பாடசாலை | " " | √ | – |
| 06. | பலாங்கொடை யசோதரா குருடர், செவிடர் பாடசாலை | " " | √ | – |
| 07. | கண்டி செங்கடகல குருடர், செவிடர் பாடசாலை | " " | √ | – |
| 08. | அநுராதபுரம் குருடர் செவிடர் பாடசாலை | " " | √ | – |
| 09. | மாத்தறை றோகண குருடர், செவிடர் பாடசாலை | " " | √ | – |
| 10. | குருனாகலை உறும்மிய குருடர், செவிடர் பாடசாலை | " " | √ | – |
| 11. | தங்காலை குருடர், செவிடர் பாடசாலை | " " | √ | – |
| 12. | கொரேதுடுவை சந்திரசேகர செவிடர் பாடசாலை | செவிப்புல னற்றோர் | √ | – |
| 13. | பண்டாரவளை ஸ்ரீசுதர் செவிடர் பாடசாலை. | " " | √ | – |
| 14. | மாத்தளை கைக்காவனல செவிடர் பாடசாலை | " " | √ | – |
| 15. | திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம் | " " | – | – |
| 16. | "சவன் சஹன" சேவை பாடசாலை மொறட்டுவை | " " | – | – |

## உளக் குறைபாடுடைய மாணவருக்கான பாடசாலைகளும் நிலையங்களும்

| பாடசாலை/நிலையம் | வகை | உதவி நன்கொடை பெறும் | தனியார் |
|---|---|---|---|
| மாதிவெல உளக் குறை பாடுடைய மாணவருக்கான நிலையம் | உளக் குறை பாடு | – | √ |
| வத்தளை, பிரதிபுர நிலையம் (ஆண்) | " " | – | √ |
| மகரகம, அசரிதேதய, புனர்வாழ்வு மத்திய நிலையம் | " " | – | √ |
| கிக்கடுவை—"சுபெமி" சேவை | " " | – | √ |
| கொழும்பு, சித்திரா லேன், உளக்குறைபாடுடை யோருக்கான நாட் பாடசாலை. | " " | – | – |
| கொடகலை ஆனந்தபுரம், உளக் குறைபாடு மாணவர் நிலையம் | " " | – | – |
| நல்லூர், உளக்குறைபாடுடைய யோருக்கான மாணவர் நிலையம் | " " | – | √ |

## வலது குறைந்த மாணவருக்கான பாடசாலைகளும், தாபனங்களும்

| பாடசாலை/நிலையம் | வகை | உதவி பெறும் பாட சாலை | அரசின் | தனியார் |
|---|---|---|---|---|
| காலி சம்போதி மாணவர் நிலையம் | பல் வகை குறை பாடு | √ | – | – |
| கேகாலை, அம்பன்பிட்டி அங்கவீன மாணவர் களுக்கான நிலையம் | உடல் அங்க வீனம் | – | √ | – |
| கோட்டை "செவன" மாணவர் நிலையம். | " " | √ | – | – |

இக் குறைபாடுகளினால் பாதிப்புறும் மாணவர்கள் தொடர்பாக விசேட சேவைகளைப் பெறுதலும் அவசியமாகும். அவ்வாறான சேவையினைப் பெற்றுக் கொடுக்கும், தாபனங்களையும் பெறத்தக்க சேவைகளைப் பற்றியும் (கற்றலில் ஈடுபடுவோம்) கற்போம்.

**பலவீனங்களினால் அல்லலுறும் மாணவர்கள் தொடர்பாக கல்வி—மதிப்பீட்டு நிலையங்கள்**

| நிலையத்தின் பெயர் | விசேட சேவைகள் |
|---|---|
| (1) இரத்மலானை செவிடர் பாடசாலை | செவிப்புலக் கூர்மையினை அளத்தல். செவிப்புல உதவு உபகரண பயிற்சி. பெற்றோருக்கான ஆலோசனை சேவைகள். |
| (2) இராகமை-செவிடர் பாடசாலை | ” ” ” |
| (3) கண்டி, தலைமை வைத்திய நிலையம் செவிப்புல பரிசோதனை மையம் | ” ” ” |
| (4) மஹரகமை தேசிய கல்வி நிறுவக விஷேட கல்வி நிலையம் | செவிப்புலக் கூர்மையை அளத்தல். செவிப்புல, உதவ உபகரணப் பயிற்சி. பெற்றோர்-ஆலோசனை உளக்குறைபாடுடைய மாணவரின் கற்றல் மதிப்பீடு - பெற்றோர் மதிப்பீடு, பார்வை குறைபாட்டினால் அல்லலுறும் மாணவரின் கற்றல் மதிப்பீடு. |
| (5) பண்டாரகம வைத்திய நிலைய பார்வை குறைபாடுடையோருக்கான சிகிச்சை நிலையம் | கண் பரிசோதனை, செவிப்புலன் பரிசோதனை, பார்வை வில்லைகளை அளித்தல் - பெற்றோர் ஆலோசனை. |
| (6) குருனாகல நிஸ்ஸங்க ஆரம்ப பாடசாலை | ” ” ” |
| (7) அநுராதபுர மத்திய மகா வித்தியாலயம் | ” ” ” |
| (8) சிறுவர் வைத்திய நிலையம்- பொரல்லை. | ” ” ” |
| (9) செவிடர் மக்கள் சேவை நிலையம் | செவிப்புலன் பரிசோதனை, பெற்றோர் ஆலோசனை. |

**கல்வி அமைச்சின் கீழான குறைபாடுகளினால் அல்லலுறுவோர்க்கான சேவை அளிக்கும் தாபனங்கள்.**

**மஹரகம ஆசிரியர் பயிற்சி கலாசாலை :-**

விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்க்கு கற்பித்தலுக்கான ஆசிரிய பயிற்சி நெறிகளை நடாத்துதல். இது தொடர்பாக கீழ்வரும் இரு வருட பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

* பார்வை புலனற்ற மாணவர்க்கான கற்பித்தல்பற்றிய ஆசிரியர் பாடநெறி.
* செவிப்புலனற்ற மாணவர்களுக்கு கற்பித்தல்பற்றிய ஆசிரிய பயிற்சி நெறி.
* உளக்குறைபாடுடைய மாணவர்க்கு கற்பித்தல்பற்றிய ஆசிரியர் பயிற்சி நெறி.

**மகரகம—பிரெயில் அச்சகம் :-**

தீவின் சகல பார்வையற்ற மாணவர்க்கு தேவையான பிரெயில் புத்தகங்களை அச்சடித்து விநியோகித்தல் இதன் கடமையாகும்.

**விஷேட கல்வி நிலையம் :-**

தேசிய கல்வி நிறுவகம்-மஹரகம

1989 இல் ஆரம்பித்த இந்நிறுவகம் கீழ்வரும் நோக்கங்களை நிறைவேற்ற எதிர்பார்க்கின்றது.

* கலைத்திட்ட அபிவிருத்தி
* பட்டபின் பாடநெறி அபிவிருத்தி
* விசேட கல்வியுடன் தொடர்புடைய பரிசோதனைகள்
* தொடர்பு ஊடகச் செயற்பாடுகள்

## குறைபாடுகளினால் அல்லலுறும் நபர்கள் தொடர்பான தொண்டர் நிலையங்கள்

| நிலையம் | சேவை |
|---|---|
| (1) பார்வையற்றோர் மக்கள் சேவைக் குழு, கோயில் வீதி, கொழும்பு-2 | தொழிற் பயிற்சி, தொழிலில் ஈடுபடுதல் |
| (2) செவிப்புலனற்றோர் மக்கள் சேவைக் குழு, இராஜகிரிய | தொழிற் பயிற்சி செவிப்புலன் பரிசோதனை, பாலர் பாடசாலை, கல்வி |
| (3) உளக்குறைபாடுகள் தொடர்பான இலங்கை நிலையம், வஜிரா தெரு, கொழும்பு-4 | தொழிற் பயிற்சி, தொழிலில் ஈடுபடுதல் |
| (4) செவிப்புலன் குறைபாடுடைய மாணவரின் பெற்றோர் சங்கம் "சுவசெத" சர்வோதயம், மொறட்டுவை | பெற்றோர் ஆலோசனை |
| (5) வலுவிழந்தோரின் மத்திய அதிகார குழு, பண்டாரவளை | வலுவிழந்தோரின் உரிமைகளைப் பாதுகாத்தல், பயிற்சி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தல், தொழிலில் ஈடுபடுத்தல், தொடர்பு கொள்ளல் |

## செயற்பாடு II

நீங்கள் கற்ற இப்பகுதி தொடர்பாக கீழ்வரும் செயற்பாட்டினை செய்க.

| விசேட கல்வித் தேவை வகை | நிலையம் | நிலையம் | | | கல்விச் சேவைக்கு மேலதிகமான சேவை |
|---|---|---|---|---|---|
| | | அரச | தனியார் | உதவி பெறும் | |
| (1) செவிப்புலன் அற்ற | (1) இரத்மலானை செவிப்புலனற்றோர் பாடசாலை | | | | * செவிப்புலன் கூர்மை அளத்தல்<br>* செவிப்புலன் உதவு உபகரணப் பயிற்சி |
| (2) பார்வையற்ற | | | | | |
| (3) உளக் குறைபாடுடைய | | | | | |
| (4) உடல் அங்கவீனமுடைய | | | | | |

விஷேட கல்வி எண்ணக்கரு தொடர்பான உமது கவனத்தை பகுதி III க்கு திருப்புக.

## பகுதி III

### 5.0 விசேட கல்வி சேவை முறைமை



பழங்கால சமூகத்தினர் தம்மிடையே வாழ்ந்த குறைபாடுகளினால் பாதிப்புற்றவர்களை பொது வாழ்விலிருந்து ஒதுக்கி வைத்திருந்தனர் அல்லது கேலிக்கு ஆளாக்கினர். அவர்கள் மிக ஏழ்மையான கஷ்ட ஜீவனோபாயத்தை நடத்தி வந்தனர், அல்லது விசேட தாபனங்களினுள் ஒளித்து வாழ்ந்தனர். வலுவிழந்தவர் களையிட்டு கருணையுடன் நோக்கும் தன்மை மிக அண்மையிலேயே உலக நாடுகளில் தோன்றியது.

எவ்வாறாயினும் எமது நாட்டு வரலாற்றினை நோக்குமிடத்து இது தொடர்பாக நாம் மிகவும் பெருமைப்படலாம். பலவீனங்களினால் அல்லலுறும் மக்களைப் பாதுகாத்தபடி அவர்களின் நலனை மேம்படுத்துதல் மிகப் பழமையான காலத்திலிருந்தே நம் நாட்டவரிடையே காணப்பட்ட உயர் பண்பாகும். எமது நாட்டின் வரலாறு இதற்கான ஆதாரங்களைக் கொண்டுள்ளது. இவை நம் நாட்டிற்கு பெருமை தரும் விடயங்களாகும்.

கி.பி. 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மன்னன் புத்ததாசன் தனது ஆட்சிக் காலத்தில் நாட்டின் பல்வேறு இடங்களில், பார்வையற்றோர், செவிப்புலனற்றோர், வலுவிழந்தோர் ஆகியோரை பராமரிப்பதற்கான நிலையங்களை நிறுவி அவர்களைப் பாதுகாத்தார். மேலும் அக்காலத்தில் யானை, குதிரை போன்ற பலவகை மிருகங்களுக்கும் வைத்திய உதவிகள் வழங்கப்பட்டன. அவரது மகனான உபதிஸ்ஸ குமாரன் தனது ஆட்சிக் காலத்தில் முடவர், அந்தகர், நோயாளர், கர்ப்பமுற்றோர் போன்றோருக்காக பராமரிப்பு நிலையங்கள், தாய் சேய் மருத்துவ நிலையங்கள், அன்னதான சாலைகள் போன்றவற்றை நிறுவினார் என அறியப் படுகின்றது. இவ்வாறான உயர் சேவைகளை அளிக்கும் பண்புகள் அந்நியர் ஆதிக்கத்துடன் அழிந்தொழிந்தன. இன்று இலங்கையில் பரவியுள்ள முறைமைகள், வெளிநாட்டார் இங்கு பரப்பிய முறைகளாகும். இந்நிலையை 4 கால கட்டங்களாகப் பிரித்து உரையாட முடியும்.

(1) பிரித்து வைக்கும் கட்டம் :-


இக்கால கட்டத்தின் போது குறைபாடுகளால் பாதிப்புற்றவர்கள் சமூக அமைப்பில் இருந்து பிரித்து வைக்கப்பட்டனர். இவர்களுக்காக வேறான (தனியான) நிலையங்கள் (மடங்கள்) தாபிக்கப்பட்டன.

(2) பராமரிக்கும் கால கட்டம் :-

சமயக் குரவர்களின் அனுசரனையுடன், விசேட தாபனங்களில், குறைபாடுகளினால் அல்லலுறுபவர்களுக்கு அடிப்படைத் தேவைகள் அளிக்கப்பட்டன. குறைபாடுகளை உடைய வயது வந்தோரும் இந் நிலையங்களிலேயே தங்கியிருந்தனர். பொது வாழ்வில் பங்காளராகும் சந்தர்ப்பம் இவர்களுக்கிருக்கவில்லை.

(3) புனர் நிவாரண கால கட்டம் :-

பராமரிக்கும் கால கட்டத்தை விட அபிவிருத்தியடைந்த கால கட்டமாகும். தொழிற் பயிற்சியினை பெற்றுக் கொடுத்து அவர்களை உற்பத்தியில் ஈடுபட வைப்பதற்கு விஷேட கவனம் செலுத்தப்பட்டது. குறைபாடுகளினால் பாதிப்புற்றவர்களினால் செய்யக்கூடிய விடயங்களைப் பற்றியே இங்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. அன்றியும் அவர்களால் செய்து முடிக்க முடியாத காரியங்களைப் பற்றியல்ல.



(4) ஒன்றிணைக்கும் கால கட்டம் :-

குறைபாடுகளினால் அல்லலுறுபவர்களுக்கு தக்கவாறான சமூக அமைப்பினை உருவாக்குதல் இக்கால கட்டத்தில் நடைபெற்றது. குறைபாடுகள் குறிப்பிட்டதோர் நபரை மாத்திரம் பாதிக்கும் பிரச்சினையாக கருதப்படவில்லை. குறைபாட்டின் அளவு தொடர்பாக சமூகம் பாதிப்பினை ஏற்படுத்தத்தக்கதாகையால் (அடையுமாதலால்) பாதிப்பின் அளவை கட்டுப்படுத்துவதற்கு சமூகமும் தன்னால் ஆனவற்றை செய்தல் அவசியமாகும். குறைபாடுகளினால் அல்லலுறுபவர்களுக்கும் மற்றவரைப் போன்றே சமுதாயத்தில் பங்கு கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். இதனை "பொதுவாக்கல்" எனப்படும். பொதுவாக்கல் என்னும் எண்ணக்கருவை தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் அவசியமாகும். குறைபாடுகளினால் பாதிப்புற்றவர்கள், சமூகத்துடன் ஒன்றிணைதல் அவசியமாகும். இவ்வாறு சமூகத்துடன் ஒன்றிணைவதற்காக, பாடசாலை சமூகத்துடன் ஒன்றிணைதல் அவசியமாகின்றது. விசேட கல்வித்

தேவைகளையுடைய மாணவரும் தமது தேவைகளை பொதுவான கல்வித் தொகுதியினூடாக பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். அவ்வாறாயின், மாணவன் தமது வளர்ச்சிக் காலத்தினுள்ளேயே சமூக மயமாவதற்கான சந்தர்ப்பத்தைப் பெறுகின்றான். சமுதாயத்தில் பலவகை குறைபாடுகளினால் பாதிப்புறு பவர்கள் வாழ்கின்றார்கள். சமூகத்திற்கு கல்வியை அளிக்கும் பாடசாலை அச்சமூகத்தின் பிரதி பலிப்பாயமைதல் அவசியமாகும். அங்கும் குறைபாடுள்ள வர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படல் வேண்டும். கல்வி ஒன்றிணைத்தல் என்பது ஒரே கலைத்திட்டம், பழமை பேணும் முறையில் செயற்படுத்தப்படல் அல்ல. ஒவ்வோர் மாணவனுக்கும் தக்கவாறான முறையில் அமையப்பட்ட கல்வித்திட்டமிடல் இங்கு ஏற்படுத்தப்படல் வேண்டும். மதிப்பிடப்பட்ட விசேட கல்வித் தேவைகளை பூரணப் படுத்துவதற்காக இவ்வாறான தனிநபர் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட கல்வித்திட்டமிடல் பயன்படுத்தப்படல் வேண்டும்.

இலங்கையில், பலவீனமுள்ள மாணவர்களை ஒன்றிணைத்தல் கொள்கை ரீதியான பிரச்சினையல்ல. இங்கு கடந்த 25 ஆண்டுகளாக இத்திட்டம் நடைமுறையில் உள்ளது. ஆகவே இன்றைய நிலையில் நாம் சிந்திக்க வேண்டியது ஒன்றிணைக்கும் கல்வித் திட்டத்தை எவ்வாறு வளர்ச்சியுற வைப்பது என்பதாகும். ஆகவே நாம் இங்கு பல்வேறு முறையிலும் பல்வேறு அளவிலும் ஒன்றிணைத்தல் தொடர்பாக ஆராய்ந்து நோக்குவோம்.



(அ) பௌதீகரீதியான ஒன்றிணைத்தலினால், பலவீனமுள்ள மற்றும் பலவீனமற்ற இரு ப்குதியாரினதும் வித்தியாசங்கள் குறைவடையும். பலவீனங்களையுடைய மாணவர் குழுவினர், பொதுவான பாடசாலை முறைமையினுள் அமைக்கப் பட்டுள்ள தனியான வகுப்பறையில் அல்லது அலகில் விசேட வள ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுவர்.

(ஆ) செயல் சார்பான ஒன்றிணைப்பு

இங்கு மாணவரின் குறைபாடுகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. அவர்களின் பாரம்பரிய தனித்தனி (தனியாள்) வேறுபாடுகளையும் கருதப்படமாட்டாது. சகலருக்கும் பொதுவான வகையில் பாடசாலையில் உள்ள வளங்கள் பகிர்ந்து கொள்ளப்படும். விசேட தேவையுள்ள மாணவர் பாடசாலை கலைத்திட்டத்தில் பல வகையான வேலைகளில் பங்கு கொள்ளும் அதே சமயம் வள ஆசிரியர்களினதும் பயனைப் பெறுவர். சில சமயம் விசேட ஆசிரியரின் உதவியையும் பெறமுடியும்.



(இ) பாடசாலை சமூகத்துடன் ஒன்றிணைதல்

இதன் மூலம் விசேட தேவைகளையுடைய மாணவர்கள் பாடசாலையின் மற்றைய மாணவருடனும், ஆசிரிய ஆசிரியைகளுடனும் அண்மித்த தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளுதல் நடைபெற வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

(ஈ) சமூக ஒன்றிணைத்தல்

ஒன்றிணைத்தலின் இறுதி இலக்கு விசேட தேவைகளையுடைய மாணவர் வயது வந்தோராகிய பின் சமூகத்துடன் ஒன்றிணைதலாகும். சமூகத்தின் கலாச்சார விழுமியங்கள் பற்றி அறிந்திருத்தல் அவசியம். சமூகத்தில் பயன்தரும் தொழில்கள் பற்றிய அறிவும் திறனும் பெற்றிருத்தல் வேண்டும். கிராமிய பாடசாலையில் சிறு பராயத்திலிருந்தே கல்வி கற்ற மாணவர்க்கும் வருங்கால சமூகத்தின் அங்கீகாரத்துடன் பொருளாதார அமைப்புடன் பயன்தரு வழியில் பங்கு கொள்ள அவர்களுக்கு இதனடிப்படையில் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

மேற்படி விவரங்களின்படி விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவருக்காக சமூகத்தில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ள சேவைமுறை பற்றிய விளக்கத்தினை நீங்கள் பெற்றிருப்பீர்கள் என நம்புகின்றேன். அது போன்றே சமூகத்தில் ஒன்றிணைக்கப்படுதல் அத்தியாவசியமான பகுதியாகும்.

விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர் பற்றிய கற்றலுக்காக எதிர்காலத்தில் உமது கைகளில் கிடைக்கப்படும் மொடியூல்கள் மேலும் பயனளிக்கும். கீழ்வரும் ஒப்பீட்டிற்கு விடையளிப்பதன் மூலம் நீர் கற்றவற்றைப் பற்றி உறுதிப்படுத்திக் கொள்க.

## செவ்வை பார்த்தல் I

(1) விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவரை நோக்க வேண்டியது,

1. அவர்கள் சமூகத்திலிருந்து வேறுபட்ட பகுதியினர் என.
2. அவர்கள் சமூகத்திலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டிய பகுதியினர் என.
3. சமூகத்திற்கு பயனற்ற பகுதியினர் என.
4. மனித சமூகத்தின் புதியதோர் வளமென.

(2) விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவரை ஒன்றிணைத்தல் என்பதனால் கருதப்படுவது,

1. மற்றைய மாணவரைப் போன்று பொதுப் பாடசாலையில் தமது கல்வி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள வழி கோலுதலாகும்.
2. சமமான குறைபாடுள்ள மாணவரை ஒன்றிணைத்து கற்பித்தலாகும்.
3. பொதுவான குறைபாடுள்ள மாணவரை ஒன்றிணைத்து கற்பித்தல்.
4. பொதுவான வகுப்பறையில் விசேட ஆசிரியரை பயன்படுத்தி கற்பித்தலாகும்.

(3) ஒன்றிணைத்தலை வெற்றிகரமாக்குவதற்கு,

1. விசேட பயிற்சிபெற்ற ஆசிரியரின் உதவி தேவைப்படும்.
2. தனிநபர் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட கல்விமுறையொன்றினை திட்டமிட்டு சமர்ப்பித்தலாகும்.
3. பொது ஆசிரியரினால் முழு நேரமாக பொது கலைத்திட்டத்திற்கேற்ப கற்பித்தலாகும்.
4. பாடசாலையில் செய்ய முடியாத காரியங்களை பெற்றோருக்கு பொறுப்பளித்தல்.

(4) விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவரின் கல்வி இலக்காக அமைவது.

1. தொழிலொன்றுக்கான பயிற்சியினை வழங்குவதாகும்.
2. சமூகத்தின் பங்காளராக்குதல்.
3. ஆரம்ப எழுத்தறிவினை பெற்றுக் கொடுத்தல்.
4. குறைகளை தவிர்ப்பதற்காகவாகும்.

| |
|---|
| உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக. |

நீர் கற்ற விவரங்களை உமது பயன் கருதி இங்கு பொழிப்பாக தருகின்றேன்.

## 6.0 பொழிப்பு

சகல மாணவர்க்கும் உரிமையான தனித்துவம் உண்டு தனித்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காக, அந்தந்த நபருக்கேற்றவாறு, கூடிய அல்லது குறைந்த அளவில், உதவி அளித்தல் அவசியமாகும். இது ஆசிரியரின் கடமையாகும். அதிகமாக உதவி தேவைப்படும் மாணவருக்கும், தமது தனித்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காக, சந்தர்ப்பங்கள் தேவையென சர்வதேச வெளியீடுகள் விளக்குகின்றன. அது போன்றே சட்ட ஆணைகளின்படியும் அவர்களது

உரிமையும் பாதுகாப்பும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இலங்கையிலும் அம்மாணவருக்கான கல்வி வேலைத் திட்டங்கள் படிப்படியாக பரவலாக்கப்படுகின்றது. ஒவ்வொருவருக்கும் உரிமையான வேறுபாடுகளைக் கருதாமல், தமது திறன்களை கூடிய அளவில் வளர்ச்சி பெறச் செய்வதற்காக சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுத்தல் கல்வியின் சவாலாகும்.

இம் மொடியூலில் நீர் கற்றவைகளை அளவிடுவதற்காக இவ் இறுதி மதிப்பீட்டை செய்து பார்க்கவும்.

## 7.0 பிற்சோதனை

(1) நபர் ஒருவர் தனது இயல்புக்கேற்றவாறு தனது சூழலை விளங்கிக் கொள்கின்றார். இதன் கருத்து,

1. தனிநபர் வேறுபாடுகள்.
2. சூழல் வேறுபாடுகள்.
3. சமூக வேறுபாடுகள்.
4. கலாச்சார வேறுபாடுகள்.

2) சகலருக்கும், கல்வியை பெற்றுக் கொடுத்தல் என்பது,

1. சகலரையும் பாடசாலைக்கு வர வைத்தல்.
2. பலவீனமுள்ள மாணவரை மற்றையோரிடமிருந்து வேறுபடுத்தி கற்பித்தல் வேண்டும்.
3. தனிநபர் வேறுபாடுகளுக்கமைய கற்பித்தல் வேண்டும்.
4. சமூகம் கல்வி வேலைகளில் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(3) இலங்கை மாணவர்களின் உட்புகும் திறன் பற்றிய பரிசோதனை அறிக்கையில், மாணவரில் 8 % க்கு உட்புகும் திறன் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் என்ன கருதப்படுகின்றது,

1. முதலாம் ஆண்டில் சேர்க்கப்படும் மாணவரில், 8 % கற்றல் செயற்பாட்டில் எவ்வகையிலும் பங்கு கொள்ள முடியாதென்பதாகும்.

2. முதலாம் ஆண்டில் சேர்க்கப்படும் மாணவரில் 8 % ஆரம்பத்திலேயே பாடசாலையிலிருந்து விலகிச் செல்கின்றனர் என்பதாகும்.

3. முதலாம் ஆண்டில் சேர்க்கப்படும் மாணவரில் 8 % கற்றல் செயற்பாட்டை சீரான முறையில் கலந்துகொள்ள முடியாதென்பதாகும்.

4. முதலாம் ஆண்டில் சேர்க்கப்படும் மாணவரில் 8 % கற்றல் செயற்பாடுகளுக்காக விசேட உதவிகள் தேவைப்படுகின்றது.

(4) கீழ் குறிப்பிடப்படும் எந்த வெளியீட்டில், "சகல குறைபாடுடைய தனியாட்களுக்கும், கல்வி, பயிற்சி, கலாசாரம் மற்றும் பொதுசன தொடர்பு ஊடகங்கள் போன்றவற்றில் தொடர்புறும் அடிப்படை உரிமையினை உறுதிப்படுத்தல் வேண்டும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

1. 1971 ஆண்டில் உளக் குறைபாடுடையோரின், உரிமைகள் பற்றிய சர்வதேச வெளியீட்டில்.

2. 1975 ஆண்டில் வலுவிழந்த நபர்களின் சர்வதேச உரிமைகள் வெளியீட்டில்.

3. 1981 ஆண்டின் அங்கவீனர்க்கான சர்வதேச ஆண்டில், வெளியிடப்பட்ட அறிக்கையிலாகும்.

4. 1989 ஆண்டின் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனத்திலாகும்.

(5) ஒன்றிணைக்கும் காலகட்டத்தில், நடைமுறைப்படுத்த எதிர்பார்த்த நோக்கங்கள் ஆனவை,

1. தொழிற் பயிற்சியினை பெற்றுக் கொடுப்பதன் மூலம் உற்பத்தி செயற்பாட்டில் ஈடுபட வைத்தல்.

2. குறைபாடுகளால் அல்லலுறுபவர்களை சமுதாயத்தில் ஒன்றிணைத்தல்.

3. பலவீனங்களால் அல்லலுறுபவர்களை சமுதாயத்தில் இருந்து தள்ளி வைத்தல்.

4. விசேட தாபனங்களில், குறைபாடுகளால் அல்லலுறுபவர்களுக்கு அடிப்படைத் தேவை களை அளித்தல்.

(6) விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவரில் பாடசாலையில் இருந்து விலகுபவர்களின் தொகையை

குறைத்துக் கொள்ளல்,

1. பாடங்களை மையமாக்கிய கல்வி முறையினாலாகும்.
2. ஆசிரியர் மைய கல்வி முறையிலாகும்.
3. வாழ்க்கை மைய கல்வி முறையிலாகும்.
4. பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையிலாகும்.

| |
|---|
| உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக. |

## 8.0 ஒப்படை

உமது கிராமத்தில் உள்ள விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர் ஒருவர் தமக்குத் தேவையான சேவைகளை பெற்றுக் கொள்ள அணுக வேண்டிய நபர்களையும், தாபனங்களையும் பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்க.

கீழ்வரும் தலைப்புக்களின் அடிப்படையில்,

(i) பரிசோதனை வசதிகள்.

(ii) வைத்திய ஆலோசனைகள்.

(iii) ஒன்றிணைந்த கல்வி வேலைத்திட்டம்.

(iv) வதிவிடப் பாடசாலைகள்.

(v) வதிவிட நிலையங்கள் (தாபனங்கள்).

## 9.0 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| முற்சோதனை | 1 ஆ | 2 ஈ | 3 ஈ | |
| செவ்வை பார்த்தல் | 1 – 4 | 2 – 1 | 3 – 2 | 4 – 2 |
| பிற்சோதனை | 1 – 1 | 2 – 3 | 3 – 1 | |
| | 4 – 3 | 5 – 2 | 6 – 3 | |

## 10.0 அநுபந்தம்

### விசேட கல்வியுடன் தொடர்புடைய சொற்கள்

உலக சுகாதார தாபனத்துடன் தொடர்பான சொற்களும் அவற்றுக்கான விளக்கங்களும் :

**ஊனமுறல் :** உளவியல் ரீதியாக, உடல் மற்றும் உடலுறுப்புக்களின் அமைப்பில், அல்லது செயற்பாட்டில் குறைபாடு அல்லது அசாதாரணத் தன்மை எனக் குறிப்பிடலாம்.

**அங்கவீனம் :** சாதாரண நபரொருவரைப் போன்று செயற்படுவதற்கு ஊனம் அல்லது பலவீனக் குறைபாட்டினால் ஏற்படும் தடை அங்கவீனம் எனப்படும். அங்கவீனம் என்பது சூழல், பலவீன முடைய நபர் ஆகியவற்றிடையேயான இடைத் தொடர்பின் விளைவாகும். சனத்தொகையின், பூரண வாழ்க்கையின் போது மற்றவரைப் போன்று பங்கு கொள்வது கட்டுப்படுத்தப்படல் அல்லது தடைப்டுதல் நடைபெறும்.

**தவிர்த்தல் :** உடலில், உள்ளத்தில் அல்லது அங்கங்களில் ஊனம் ஏற்படுதலை கட்டுப்படுத்த எடுக்கப்படும் செயற் பாடுகள் பலவீனங்களை தவிர்த்தல் என அழைக்கப்படும். மேலும் ஊனமுறல் ஏற்படுத்தப்பட்டவுடன், அதனால் ஏற்படும் தீமையான உடல், உள, சமூக கேடுகளை கட்டுப்படுத்துதலும் இதில் அடங்கும்.

**புனருத்தாபனம் :** ஊனங்களினால் அல்லற்படும் நபரொருவரை கூடிய அளவில், உடல், உள அல்லது சமூக செயற்பாடுகளில் பங்கு கொள்ளச் செய்யும் நோக்கத் துடன், குறிப்பிட்ட கால எல்லையினுள் செயற்படுத்தப்படும் வேலைத் திட்ட மென புனருத்தாபன வேலைத் திட்டத்தை குறிப்பிடுவர். அதன் மூலம், தனது வாழ்வை திருத்தியமைப்பதற்கு தேவை


களையும், திறன்களையும் முடிந்தவற்றையும் பெற்றுக் கொடுத்தல் நடைபெறும். அவ்வாறே சில செயற்பாடுகள் உரிமையற்றுப் போதலை சமப்படுத்தும் செயற்பாடுகளை எடுப்பதும் இதில் அடங்கும். (உ.ம். : தொழிநுட்ப உதவி வழுங்கல்)

**பொது சந்தர்ப்பங்களை பாதுகாத்தல்**

பௌதிக மற்றும் கலாச்சார சூழல், வீடு மற்றும் போக்குவரத்து, சமூகம் மற்றும் சுகாதார சேவை, கல்வி மற்றும் தொழில் சந்தர்ப்பம், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் உட்பட சமூக கலாச்சார வாழ்வினை எவ்வித வித்தியாசமுமின்றி அனுபவிக்க சந்தர்ப்பம் அளிக்கும் செயற் தொடரென இனங் காண முடியும்.

**குறைபாடுகள்**

நபரொருவரின் சாதாரண செயற்பாடுகளுடன் ஒப்பிடும் போது ஊனங்களின் பலனாக ஏற்படும் செயல்களின் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை பலவீனம் என அறியப் படுகிறது.




அங்கவீனம் உண்டாகும் செயற்பாடு.

**ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.